**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.11/2017**
**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : **புஷ்பக்கனி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சமுத்திரக்கனி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(13.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளராக சிந்துபட்டி காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது மேலசெம்பட்டியை சார்ந்த சோலைராஜ் மனைவி பொன்னாத்தாள் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 161/2012 பிரிவுகள் 294(பி), 448, 341, 323, 506(2) இதச மற்றும் 379 NP Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு 23.09.2012 அன்று அன்றைய தினமே 18.15 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று

சாட்சிகள் ரவி மற்றும் ஆனந்தி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.6, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 24.09.2012ம் தேதி 2வது எதிரி மேலசெம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே கைது செய்தேன். சாட்சிகள் ஜெயக்கொடி, தங்கராமன் ஆகியோர்களின் முன்னிலையில் 2 வது எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது எதிரி எனது வீட்டில் 3/4 பவுன் தண்டட்டியை எனது வீட்டில் வைத்திருப்பதாகவும் என்னை கூட்டி சென்றால் நான் அதை ஆஜர் செய்ய தயாராக இருப்பதாக சொன்னார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் பின்பு 2வது எதிரியை கூட்டி கொண்டு மேலசெம்பட்டிக்கு சென்றேன். என்னுடன் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் ஜெயக்கொடி, தங்கராமன் ஆகியோர்கள் உடன் வந்தார்கள். பின்பு 2 வது எதிரியின் வீட்டில் 2வது எதிரி சொன்னபடி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான ஜெயக்கொடி, தங்கராமன் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து 3/4 பவுன் தண்டட்டி ஒன்று எதிரியிடம் இருந்து 8.30 மணிக்கு கைப்பற்றப்பட்டது. **அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**., என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தண்டட்டி தான். நான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது அது ஏற்கனவே சா,.பொ. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு மேற்படி 3/4 பவுன் தண்டட்டியை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மற்ற எதிரிகளை தேடி வந்த நிலையில் மாண்புமிகு மதுரை மாவட்டம் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று ஜாமினில் சென்றுள்ளார்கள். பின்பு வாதி பொன்னத்தாளுக்கு சிகிச்சையளித்த உசிலம்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. கங்காதேவியை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவரிடம் இருந்து காயச்சான்று பெற்றேன். பின்பு விசாரணையை முடித்து எதிரிகள்

மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 448, 341, 323, 506(2) இதச மற்றும் 379 NP Actன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

எத்தனை மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது புகார் கொடுக்கப்பட்டது என்றால் 23.09.2012ம் தேதி 18.00 மணி என்று முதல் தகவல் அறிக்கையில் நான் குறிப்பிட்டு உள்ளேன். ஆனால் புகாரை நான் 17 மணிக்கு வாங்கினேன். நான் 17 மணிக்கு வாங்கிய புகாரை மறைத்து 18 மணிக்கு பெற்ற புகாரை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 17 மணிக்கு கொடுத்ததாக சொல்லும் புகார் அ.சா.1 கொடுத்ததாக சொல்லும் புகார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கைப்பற்றபட்டதாக சொல்லும் சா.பொ.1 இந்த வழக்கில் புகாரை பெறுவதற்கு முன்பே காவல் நிலையத்தில் இருப்பு வைக்கபட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பெற்ற ஒப்புதல் வாக்குமூலம், தயாரித்த அத்தாட்சி, நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடமாக காண்பிக்கப்பட்ட இடம் வாதியின் வீடு மற்றும் சிமெண்ட் ரோடு என்று இரண்டு இடமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வாதியின் வீட்டு வாசலில் உள்ள சிமெண்ட் ரோடாகும். அதே தேதியில் அதே நேரத்தில் நாட்டாமை வீட்டு அருகே ஒரு சம்பவம் நடந்ததாகவும் அதில் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டதாகவும் அ.சா.1 கூறியதை நான் மறைத்து வழக்கிற்கேற்றவாறு சம்பவயிடங்களை இரண்டாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எந்த சம்பவமும் எதிரிகளால் நான் காட்டியிருக்கும் இரண்டு சம்பவயிடங்களிலும் நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 தன்னை தாக்கியது 3 பெண்களும் ஒரு ஆண் என்றும் என சொல்லியுள்ளதை நான் எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தன்னை தாக்கியது தெய்வம், சோங்கம்மாள், ஒச்சம்மாள், காசிமாயன் என சொல்லியுள்ளார். அ.சா.1 தங்களுக்கும் எதிரிகளுக்கும் தேர்தல் முன் விரோதம் காரணம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் விநாயகர் சதுர்த்தி சுண்டல் வாங்கும் போது பிரச்சினை என்று தெரிந்து கொண்டேன். ஏற்கனவே எதிரிகளுக்கும்

அ.சா.1க்கும் உள்ளாட்சி தேர்தல் சம்பந்தமாக பிரச்சினை உண்டு என்றும் அதில் அ.சா.1 தேர்தலில் வெற்றி பெற்ற செல்லபாண்டிக்கு ஆதரவாக வேலை பார்த்தார்கள் என்றும் எதிரிகள் அவருக்கு எதிராக வேலை பார்த்தார் என்றும் அந்த தேர்தலில் செல்லத்துரை ஜெயித்துவிட்டதால் எதிரிகளை பழிவாங்க வேண்டும என்ற நோக்கத்தில் ஊராட்சி தலைவர் செல்லபாண்டியின் செல்வாக்கின் பேரில் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக நான் இந்த பொய் வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் அ.சா.1க்கு நாட்டாமை வீட்டின் அருகில் நடந்த கலவரத்தின் போது யாராரோ ஏற்பட்ட காயத்தில் மயக்கமாகிவிட்ட அ.சா.1 ஐ வைத்து இந்த புகாரை நான் ஊராட்சி தலைவர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க பதிவு செய்து புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முறையாக புலன் விசாரணை செய்யாமல் போடபட்ட பொய் வழக்கு என்றாலும் இந்த வழக்கில் அ.சா.1க்கு சொந்தமான சா.பொ. 1 எதுவும் எதிரிகளால் கலவாடப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை